## 15-09-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : மின்வெளிக் குற்றங்கள் (Cyber Crime)
## தொடக்கவுரையாடல் : இராமானுஜம் நிர்ஷன்

தனி நபர்களுக்கோ அல்லது குழுக்கள், நிறுவனங்களுக்கு எதிராகவோ கணினி, இணையத்தினூடாக சுய சிந்தனையுடன் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் மின்வெளிக் குற்றங்கள் எனப்படும்.
அரசாங்கம், அரச தலைவர், பாதுகாப்பு நிறுவனங்கள், சர்வதேச நாடுகள், சர்வதேச பொது அமைப்புகளுக்கு எதிராக கணினி, இணையத்தினூடாக சுய சிந்தனையுடன் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் மின்வெளிப் பயங்கரவாதம் எனக் கூறப்படுகிறது.

**மின்வெளிக் குற்றங்களின் பிரதான வகைகள்:**
பல்வேறு வகைப்படுவதுடன் பரந்த விடயப்பரப்புகளை உள்ளடக்கியது. அவற்றில் முக்கியமான சில குற்றங்கள் பின்வருவனவாக அமைகின்றன.

*Hacking, Service Attack , Virus Attack , Software Piracy, Cyber Sex, IRC Crime - Internet Relay Chat, Net Extortion, Phishing, Spoofing, Cyber Stalking, Threatening, Salami Attack*

இலங்கையில் இடம்பெற்ற சில உண்மைச் சம்பவங்கள் -

**சம்பவம் 01**

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் தொழில்புரியும் இளம் பெண் அவர். அலுவலக நேரங்களில் மாத்திரம் Facebook பயன்படுத்துவதுண்டு. இவ்வாறே நாட்கள் கடந்தன.
ஒருநாள் தோழியரிடமிருந்து தொலைபேசியில் அவருக்கு கிடைத்த அதிர்ச்சிச் செய்தி இதுதான். "நேற்றிரவு முழுவதும் Facebook இல் இணைப்பில் இருந்தாயே? எங்களோடு அரட்டை அடித்தாயே? இப்போதெல்லாம் இரட்டை அர்த்த வசனங்களும் பேசுகிறாய் என்ன?'
இதனைக் கேட்டதும் அதிர்ச்சிய டைந்துள்ளார் அந்த இளம் பெண். ஏனென்றால் இரவில் அவர் Facebook உபயோகிப்பதற்கான எந்த வசதியும் அவரிடம் இல்லை. இதுகுறித்து செய்த முறைப்பாட்டையடுத்து தேடிப்பிடிக் கப்பட்ட உண்மை இதுதான்.

அவருடைய கணினியில் ஒரு மென்பொருள் நிறுவப்பட்டிருந்தது. அந்தக் கணினியில் அவர் என்ன வேலைகள் செய்கிறாரோ அவை அனைத்தும் அந்த மென்பொருளில் பதிவாகி இரு மணித்தியாலங்களுக்கு ஒருதடவை அந்தத் தகவல்கள் அனைத்தும் வேறொரு நபரின் மின்னஞ்சலுக்கு மாற்றப்பட்டுக்கொண்டிருந்தது. தன்னுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் பகிரங்கமானதையிட்டு சினம்கொண்டுள்ளார் அந்தப் பெண். இதுபற்றி முழுமையாக விசாரிக்கும்போது அலுவலகத்தில் உள்ள மற்றுமொரு நபர்தான் இந்தச் செயலைச் செய்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறான விடயங்களை கணினி உளவுபார்த்தல் என்று சொல்வார்கள். இணையங்களில் குவிந்து காணப்படும் Keylogger போன்றவைற்றைக் கொண்டு கணினிகளையும் செயற்பாடுகளையும் உளவுபார்க்க முடியும்.

**சம்பவம் 02**

உயர்நிலை பதவி வகிக்கும் முக்கியஸ்தர் அவர். லண்டனில் பெருந்தொகைப் பணம் (12.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) அவருக்கு அதிர்ஷ்டலாபமாகக் கிடைத்துள்ளதாக சில வாரங்களுக்கு முன்னர் மின்னஞ் சலினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.பணம் கிடைக்கப்போகிறது என்ற சந்தோஷத்தில் பதில் மடல்களையும் அவர் அனுப்பியுள்ளார். "இந்தப் பணத்தை சட்ட ரீதியாக தங்களுடைய கணக்குக்கு மாற்று வதற்குப் பல்வேறு படிமுறைகள் இருக் கின்றன. ஆவணங்கள்இ சட்டத்தரணி உத்தரவாதம் என விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதை தங்களுக்கு அறியத் தருகிறோம். அதன் பிரகாரம் ஆவணப் படுத்தல் உட்பட அனைத்து விடயங் களுக்கும் ஒருதொகை பணம் தேவைப் படுகிறது. அதனை எமது கணக்குக்கு வரவு வைப்பதன் மூலம் ஒருவார காலத்துக்குள் உங்களுக்கான அதிர்ஷ்ட லாபப் பணத்தை பெற்றுக்கொள்ளலாம்' என அவருக்கு மின்மடலொன்று கிடைத்துள்ளது.

ஒருவார காலத்துக்குள் பெரிய பணக்காரராகப்போகும் ஆசையில் அவர்கள் கேட்ட பணத்தை (கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபா) தனது வங்கிக் கணக்கி லிருந்து மாற்றம் செய்துள்ளார்.ஒருவாரத்தின் பின்னரும் பணம் கிடைக் காததை கவனித்த அவருக்கு கொஞ்சம் விளங்கத் தொடங்கியது. ஆம்! அவர் ஏமாற்றப்பட்டுவிட்டார்.

இவ்வாறான குற்றச்செயல்களை நம்பிக்கை வித்தை மோசடி (Confidence trick - Scam) எனக் கூறுவார்கள். இவ்வகையான குற்றவாளிகள் பல்வேறு வகையில் குற்றச் செயல்களில் ஈடுபடு வதுண்டு.

(மிகுதி அடுத்த பக்கம்)

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**உற்பத்தியில் பெண்களின் பங்கு பற்றிய வரலாற்றுப்பார்வை**
22-09-2011 | சி. சிவசேகரம்

**மலையகத் தொழிற்சங்கங்களும் மாற்றுத் தொழிற்சங்கமொன்றின் தேவையும்**
29-09-2011 | து. பிரபாகரன்



9/12

சி. வை. தாமோதரம்பிள்ளை (செப்டம்பர் 12, 1832 - ஜனவரி 1, 1901, சிறுப்பிட்டி, யாழ்ப்பாணம்)

பண்டைய சங்கத் தமிழ் நூல்கள் செல்லரித்து அழிந்து போகாது, தமது அரிய தேடல்கள் மூலம் அவற்றை மீட்டெடுத்து, காத்து, ஒப்பிட்டு பரிசோதித்து, அச்சிட்டு வாழ வைத்த முதல்வர். தமிழின் நூல்கள் தொடர்ந்து தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். தமிழின் பெருமையை, அருமையை தமிழர் உணர்ந்து உயர வேண்டும் என்ற அரிய நோக்கங்களோடு தொண்டாற்றியவர். தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி.

"தாமோதரம் பிள்ளை, தமது இருபதாவது வயதிலேயே 'நீதிநெறி விளக்கம்' எனும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தக் கவர்ந்தார்.
1868 ஆம் ஆண்டு, தமது முப்பத்தாறாம் வயதில், தொல்காப்பியச் சொல்லகதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையைப் பதிப்பித்தபோது, நல்லூர் ஆறுமுக நாவலரின் அறிவுரையை ஆதாரமாகக் கொண்டார், தாமோதரம்பிள்ளை. அதனைத் தொடர்ந்து 'வீரசோழியம்', 'திருத்தணிகைப் புராணம்', 'இறையனார் அகப்பொருள்', 'தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கான நச்சினார்க்கினியருரை, கலித்தொகை, இலக்கண விளக்கம், சூளாமணி, தொல்காப்பிய எழுத்திகாரத்திற்கான நச்சினார்க்கினியருரை ஆகிய பழமையான நூல்களச் செம்மையாகப் பதிப்பித்து, புலமை கொண்ட சான்றோரின் புகழ்க் கைக்கொண்டார் தாமோதரம்பிள்ளை."

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

**மின்வெளிக் குற்றங்கள்**
**முன் பக்கத் தொடர்ச்சி..**

சம்பவம் 03

ஜெர்மனியில் திருமணமான இலங்கை நபர் ஒருவர் Facebookகினூடாக இலங்கைப் பெண்ணொருவரை காதலித்துள்ளார். இவர்களுடைய காதல் நாளுக்கு நாள் ஆழமாகவும் அந்தரங்க விடயங்களைப் பரிமாறுவதாகவும் அமைந்தது. அந்த நபர் தான் திருமண மானவர் என்பதை எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது காதலியிடம் கூறவில்லை. ஒருநாள் இலங்கைக்கு வந்த அவர் தனது காதலியுடன் பல்வேறு இடங்களுக்கும் சென்றுள்ளார். சில வாரங் களுக்குப் பின்னர் மீண்டும் இலங்கை வந்து அந்தப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதாக உறுதியளித்துவிட்டு அவர் ஜெர்மனி பயணமானார்.
இந்நிலையில் அவர் திருமணமானவர் என்பதும் இவ்வாறு சில்மிஷங்களைச் செய்வதை பொழுதுபோக்காக் கொண்டி ருக்கிறார் என்பதையும் நண்பர்களினூடாக அறிந்துகொண்டுள்ளார் அந்தப் பெண். அதன் பிறகு தொடர்புகொள்ளவில்லை. சில மாதங்களுக்குப் பின்னர் ஜெர்மனி நபர் இலங்கைக்கு வந்துள்ளார். மீண்டும் அந்தப் பெண்ணை தொடர்புகொண்டு தன்னுடன் உணவு அருந்த வருமாறு அழைத்துள்ளார். உடனடியாக மறுப்புத் தெரிவித்த பெண் தான் ஏமாற்றப்பட்டதை தெளிவுபடுத்தி தூற்றியுள்ளார். அதற்கு ஜெர்மனி நபர் அளித்த பதில் இதுதான் "நீ என்னோடு அரட்டை அடித் தது, வீடியோ அழைப்பு மேற் கொண்டது, காதல் கதைகள், அந்தரங்க விடயங்களைப் பரிமாறியது என அத்தனை ஆதாரமும் என்னிடம் உண்டு. நீ வராவிட்டால் இவை அத்தனையையும் உனது நிஜப் பெயரோடு இணையத்தளத்தில் தரவேற்றுவேன்'. இவ்வாறு மிரட்டும் நபர்கள் பலர் இருக்கிறார்கள்.
இவர்களை இணையக் குற்றவாளிகள் (Internet criminals) எனச் சொல்கிறோம்.

சம்பவம் 04

இளைஞர் ஒருவர் Facebookகில் அதீத ஆர்வம் கொண் டவர். அவர் அதனை உபயோகப் படுத்திக்கொண்டி ருக்கையில் அழகான புகைப்படத்துடன் யுவதியொருவர் தன்னையும் நண்பர் குழாமில் இணைத்துக் கொள்ளுமாறு அழைப்பு மடல் விடுத்துள்ளார். இளம் பெண்ணின் தொடர்பு கிடைத்த மகிழ்ச்சியில் அவரை இணைத்துக் கொ ண்ட சுகத் இணையத்தினூடாக தனது தொடர்பாடலை வளர்த்துக் கொண்டுள்ளார். சில நாட்களின் பின்னர் வீடியோ காட்சியினூடாக முகம்பார்த்துப் பேச வேண்டும் என்ற அந்தப் பெண்ணின் வேண்டுகோளை ஏற்ற சுகத் பேசுவதற் காகக் காத்திருந்த வேளை அந்தச் சம்பவம் நடந்தது. தன்னுடன் வீடியோ காட்சியினூடாகப் பேசவேண்டும் என்றால் இந்தத் தொடுப்பைப் பயன்படுத்துமாறு கேட்டுள்ளார் அந்தப் பெண். அந்தத் தொடுப்பை சொடுக்கியவுடன் அதனூடாக வந்த இணையப்பக்கத்தில் அந்த இளைஞரின் மின்னஞ்சல் முகவரியும் கடவுச் சொல்லும் கேட்கப்பட்டுள்ளது. ஆர்வ வெள்ளம் அறிவுக்கரையைத் தாண்டியதால் அவற்றை இணையப் பக்கத்தில் பதிவு செய்தார் அந்த இளைஞர். அதன்பின்னர் யுவதியைக் காணவில்லை. அந்த இளைஞரின் Facebook கணக்கிற்குள்ளும் நுழைய முடியவில்லை.

இரண்டு நாட்களின் பின்னர் சுகத்தின் Facebook Wallக்கு வந்த செய்தி இது தான் " உங்கள் கடவுச் சொல் எங்களிடம் இருக்கிறது. எந்த மாற்றத்தையும் எங்களால் செய்ய முடி யும். கடவுச்சொல் வேண்டுமானால் தொடர்பாடலில் எம் மோடு பேசி பணம் செலுத்துங்கள்" திட்டமிட்டு மின்னஞ்சல் வழியாக மேற்கொள் ளப்பட்ட கடவுச் சொல்லைத் திருடும் சூழ்ச்சி இது. இவ் வாறான குற்றச் செயல்களை Phishing என்று அழைப்போம். தனிநபர்களையோ அல்லது குழுக்களையோ புண்படுத்தும் நோக்கில் அல்லது அவர்களின் நற்பெ யருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக் கில் செயற்படுதலை மின்வெளித் தொந்தரவு (Cyberstalking) எனக் கூறுவோம்.




நன்றி : http://xkcd.com/385/

**சமூக உற்பத்தியில் பெண்கள்**
22-09-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - சி. சிவசேகரம்

**பெண்கள் மீதான ஒடுக்குமுறை அவர்களது உயிரியல் அடிப்படையிலானதன்று. மாறாக, அதன் தோற்றத்துக்குப் பொருளியல், சமூகப் பரிமாணங்கள் உள்ளன.**
எக் காலத்தும், சமூக உற்பத்தியிற் பெண்களின் பங்கு சமூக உற்பத்திச் சக்திகளின் விருத்தியிலும் உற்பத்தி உறவுகளிலும் தங்கியிருந்துள்ளது.
எனவே பெண்கள் மீதான பால் அடிப்படையிலான ஆதிக்கமும் ஒடுக்கலும் முழுச் சமூகத்தினதும் சுரண்டல் அடிப்படையிலான உற்பத்தி உறவுகளினின்று பிரித்து நோக்க இயலாதது.

**சமூக உற்பத்தியில் பெண்களுக்கு விதிக்கப் பட்ட இடம் சமூக அமைப்புக்களின் மாற்றத்துடன் மாறி வந்துள்ளது.**
வர்க்க சமூகத்தின் தோற்றதுக்கு முன், அதாவது "ஆதி கம்யூனிச" சமூகம் எனப்படும் அதி தொன்மையான சமூகத்தில் உற்பத்தி சமூக அடிப்படையில் அமைந்திருந்தது.
உற்பத்தியின் பயன்கள் சமமாகப் பகிரப்பட்டன.
உண்மையிற், சமூக உற்பத்தியின் உயர்விற் பெண்களின் பங்கு ஆண்களினதை விட மேலானதாக இருந்ததெனவுங் கூறலாம்.

**சமூகத்தில் பெண்களின் தாழ்வு தனியார் சொத்துடைமையாலும் குடும்பம் எனும் அமைப்பாலும் சமூக உற்பத்தியில் அவை நிர்ணயித்த வேலை ஒதுக்கீட்டாலும் உருவானது.**
வர்க்க அடிப்படையிலான வேலைப் பிரிவினை எவ்வாறு தொடங்கியதென்றோ அது எவ்வாறு பெண்கள் மீதான ஆதிக்கத்துக்கு இட்டுச் சென்றதென்றோ திட்டவட்டமாகக் கூற இயலாது.
எனினும், உற்பத்திச் சாதனங்கள் மீது (முதலில் மண்ணும் விவசாயக் கருவிகளும் விலங்குகளும்) தனியார் ஆதிக்கத்திற்குட்பட்டதோடேயே ஆணாதிக்கம் தொடங்கியது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.
அதன் பின்பு, அடிமைகளையும் உற்பத்திக் கருவிகளையும் போன்று பெண்களும் ஒரு ஆணின் உடைமையாக நேர்ந்தது.
பெண்களின் சமூக உற்பத்தி மூலம் அவர்களுக்குப் பொருள் மீது, முக்கியமாக சமூகத்தின் உற்பத்திச் சாதனங்கள் மீது, ஆதிக்கம் ஏற்படாவாறு சொத்துடைமை ஆண்களின் வசமாக்கபட்டது.
இவ்வாறு பெண்களின் உற்பத்திப் பங்களிப்பில் ஆணுக்குச் சேவையாற்றுவதும் அடுத்த தலைமுறை ஒன்றன் தோற்றமும் பராமரிப்பும் முதன்மை பெற்றன.
இதிற் குடும்பம் என்ற அமைப்பின் பங்கு முக்கியமானது எனக் காணுகிறோம்.

அடிமைச் சமுதாயத்திலும் பின்னர் வந்த நிலவுடைமைச் சமுதாயத்திலும் உழைக்கும் வர்க்கங்களில் இருந்த பெண்கள், மேலதிகமாக உடல் உழைப்பிலும் பங்குபற்றும் தேவை இருந்தது.
இவ்வாறு சமூக உற்பத்தியில் தமது ஆளுமை மறுக்கப் பட்ட பெண்கள் இயற்கையிலேயே, தமது உயிரியலமைப்புக்கமைய உடலாலும் உள்ளத்தாலும் ஆண்களிலும் கீழானோராகக் கொள்ளப்பட்டனர்.

**முதலாளியம் பெண்ணை ஒரு உற்பத்திக் கருவியாக மட்டுமன்றி ஒரு பன்முகப்பட்ட நுகர்பொருளாகவும் வடிவமைத்துள்ளது.**
முதலாளியம் தன் உற்பத்தியைப் பெருக்கி லாபத்தைக் குவிக்க இயலுமான வரை கூடிய உழைப்புச் சக்தியை வேண்டுகிறது. எனவே நவீன உற்பத்தியிற் பெண்கள் பங்கு பற்றுவது காலப் போக்கிற் தவிர்க்க இயலததாகியது.
எனினும் இது பெண்களுக்குச் சமத்துவத்தை கொண்டு வரவில்லை, மாறாக அவர்கள் மீதான சுரண்டற் சுமையை வலுப்படுத்தியுள்ளது.
முதலாளியம் குடும்பம் பற்றிய நிலவுடமைக் காலச் சிந்தனையைத் தனக்கு வசதியாகப் பயன்படுத்துகிறது.
அதே வேளை, பெண்ணை ஒரு நுகர்பொருளாக்குவது குடும்பம் என்கிற எல்லைக்கு அப்பாலும் விரிவடைந்துள்ளது.
சேவைத்தொழில்கள் என்பனவற்றின் விருத்தியுடன் பெண்ணின் உடல் வணிக நோக்கிலான சுரண்டலுக்கேற்பப் பலவாறாகவும் வடிவமைக்கப் பட்டு வருவது கவனிப்புக்குரியது.

**தொழில் பார்த்தல் என்பது குடும்ப உழைப்பிலிருந்து விடுதலை என்று தோன்றினாலும் உண்மையிற் பெண்கள் மீதான உழைப்புச் சுமை அதனாற் குறையவில்லை.**
ஊதியமில்லாத குடும்ப உழைப்பு, குறைந்த ஊதியத்திற்கான சமூக உற்பத்தி, தமக்காகப் போராடும் வலிமையின்மை எனும் வகைகளில் இன்று பெண்கள் முதலாளியத்தால் மிக அதிகம் சுரண்டப்படுகின்றனர்.

**பெண் விடுதலை என்பது பால் அடிப்படையிலானதாக மட்டுமன்றி உற்பத்தியிற் பெண்களின் சமூக நிலையையும் சார்ந்துள்ளது என்பதை இத்தால் வலியுறுத்த வேண்டியுள்ளது.**